Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

சபரிமலை பக்தர்களுக்காக சிறப்பு ரயில்கள் – கூடுதல் வசதிகள், பலத்த பாதுகாப்பு: தெற்கு ரயில்வே ஏற்பாடு



சென்னை – 25 நவம்பர், 2026 2026–27ஆம் ஆண்டுக்கான மண்டல–மகரவிளக்கு புனிதப் பயணக் காலத்தை முன்னிட்டு, சபரிமலை செல்லும் பக்தர்களின் பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்திற்காக தெற்கு ரயில்வே விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. நவம்பர் 16ஆம் தேதி தொடங்கிய இந்தப் பயணக் காலத்தில் முக்கிய ரயில் நிலையங்களில் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

204 சிறப்பு ரயில் சேவைகள் அறிவிப்பு

பயணிகளின் கூட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு, நவம்பர் 23ஆம் தேதி நிலவரப்படி சபரிமலைக்கான 204 சிறப்பு ரயில் பயணங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை, கொல்லம், திருவனந்தபுரம், மங்களூரு, பன்வெல், கோட்டயம், விசாகப்பட்டினம், ஹைதராபாத், விஜயவாடா உள்ளிட்ட நகரங்களை இணைக்கும் வகையில் இந்த ரயில்கள் இயக்கப்படுகின்றன. பயணிகளின் தேவை மற்றும் முன்பதிவு நிலவரத்தைப் பொறுத்து கூடுதல் ரயில்கள் இயக்கப்படும்.

முக்கிய ரயில் நிலையங்களில் பக்தர்களுக்கு வசதிகள்

சபரிமலை பக்தர்கள் அதிகம் பயன்படுத்தும் கோட்டயம், செங்கனூர், எர்ணாகுளம் சந்திப்பு மற்றும் எர்ணாகுளம் டவுன் ரயில் நிலையங்களில் தங்குமிடம், உணவு, குடிநீர், கழிப்பறை மற்றும் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கோட்டயம் ரயில் நிலையத்தில் ஒரே நேரத்தில் 900 பக்தர்கள் தங்கும் வகையில் மூன்று தளங்களைக் கொண்ட பயணிகள் வசதி மையம் செயல்படுகிறது. இங்கு கழிப்பறைகள், குளியலறைகள், உடைமைகள் பாதுகாப்பு அறை, உணவருந்தும் இடம் மற்றும் செல்போன் சார்ஜிங் வசதிகள் உள்ளன. ஓய்வறைகள் மற்றும் கே.எஸ்.ஆர்.டி.சி. பேருந்துகளுக்கான தனி நிறுத்தங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

செங்கனூரில் 600 பேர் தங்கக்கூடிய மூன்று பக்தர்கள் தங்கும் மையங்கள், குளிர்சாதன வசதியுள்ள காத்திருப்பு அறை, ஓய்வறைகள் மற்றும் கூடுதல் சைவ உணவு விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எர்ணாகுளம் சந்திப்பு நிலையத்தில் காத்திருப்பு அறைகள், ஓய்வறைகள், உணவு மற்றும் உடைமைகள் பாதுகாப்பு வசதிகளுடன் தற்காலிக கட்டணக் கழிப்பறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உதவி மையங்கள், கூடுதல் டிக்கெட் கவுன்டர்கள்

கோட்டயம் மற்றும் செங்கனூர் ரயில் நிலையங்களில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் மூலம் 24 மணி நேர பக்தர்கள் உதவி மையங்கள் செயல்படுகின்றன. கூடுதல் முன்பதிவில்லா டிக்கெட் கவுன்டர்கள் மற்றும் முன்பதிவு வசதிகளும் தொடங்கப்பட்டுள்ளன. பிற மாநில பக்தர்களுக்கு உதவும் வகையில் தமிழ், தெலுங்கு, கன்னடம் தெரிந்த பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கேரள அரசின் வருவாய்த் துறை, கே.எஸ்.ஆர்.டி.சி., திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியம், காவல் மற்றும் மருத்துவத் துறைகளுடன் இணைந்து தெற்கு ரயில்வே பணியாற்றி வருகிறது. கூடுதல் உணவு விற்பனை நிலையங்களும் முக்கிய ரயில் நிலையங்களில் இருந்து பயணத்தைத் தொடர சிறப்பு டாக்ஸி அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பலத்த பாதுகாப்பு – மருத்துவ உதவிக் குழுக்கள்

பக்தர்களின் பாதுகாப்புக்காக பெண் காவலர்கள் உள்ளிட்ட கூடுதல் ரயில்வே பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மோப்ப நாய்கள் உதவியுடன் வெடிகுண்டு மற்றும் நாசவேலை தடுப்புச் சோதனைகளும் நடத்தப்படுகின்றன.

மருத்துவ அவசர உதவிக்காக செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் படை, தெற்கு ரயில்வே மருத்துவப் பிரிவு மற்றும் கேரள அரசின் சுகாதாரத் துறையினர் அடங்கிய விரைவு உதவிக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளன. எர்ணாகுளம், செங்கனூர், திருவல்லா, கோட்டயம், காயங்குளம் ஆகிய ஐந்து நிலையங்களில் கேரள ரயில்வே காவல்துறையின் 24 மணி நேர உதவி மையங்கள் செயல்படுகின்றன. செங்கனூர், கோட்டயம் நிலையங்களில் கூடுதல் சிசிடிவி கண்காணிப்புக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதிகாரிகள் தொடர் கண்காணிப்பு

சிறப்பு ரயில் இயக்கம், பயணிகள் வசதிகள் மற்றும் கூட்ட நெரிசல் ஆகியவற்றை ரயில்வே அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். மகரவிளக்கு நாளன்று செங்கனூர், எர்ணாகுளம் சந்திப்பு, கோட்டயம் நிலையங்களில் பயணிகள் போக்குவரத்தை ஒருங்கிணைக்க சிறப்புக் குழு பணியில் ஈடுபடுத்தப்படும். சபரிமலை வரும் அனைவருக்கும் பாதுகாப்பான, வசதியான பயணத்தை உறுதி செய்ய தெற்கு ரயில்வே தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.